மறுபயிற்சி அளித்தல்

*4061 திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் செயல்பாட்டை மேம்படுத்த அவர்களுக்கு மறுபயிற்சி (Refresher course) அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் கல்வியின் தரம் மிகவும் மோசமாக உள்ளது. ஆகவே, சொல்லிக்கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளிக்கும் வகையில் இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், ஆதி திராவிட மாணவர்கள் கல்வித் தரத்தில் மேம்பாடு அடைய அவர்களுக்குச் சொல்லித் தருகின்ற ஆசிரியர்களுக்குத் தகுந்த முறையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் நல்லமுறையில் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க முடியும், ஆகவே, இதனை மறுபரிசீலனை செய்து பயிற்சி அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் எல்லோரும் அவர்களுடைய ஆசிரியர் பயிற்சியை முடித்த பிறகுதான் நியமிக்கப்படுகிறார்கள். அத்தியாவசியமான தேவைகளை முன்னிட்டு அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் ஆசிரியர்கள் சரியாக வருவதில்லை என்று பொதுவாக. பரவலாக பேசப்படுகிறது. அதுபோல, பள்ளிகள் சரியாக பராமரிக்கப்படுவதில்லை என்றும் சொல்லப்படுகிறது, இக்குறைபாடுகளைப் போக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், ஆதி திராவிட நலத்துறை இயக்குநர் இவர்களைக் கொண்டு திடீரென்று சோதனை செய்ய, நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

1990 மே, 2]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகள் கடந்த காலங்களிலே இருந்தன. ஆனால் நம்முடைய இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு பிறகு, அந்தந்தத் துறையினுடைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைனய பெரு முயற்சியால், தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, சிறப்பான பணி யில் இருக்கில்.) அத்தனை ஆசிரியர் பெருமக்களும், ஆசிரியர்க ளாகப் பணி செய்ய ஆவன செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆடுதுறை அரசு மருத்துவ மனை.

*3139. **திரு. செ. இமராலிங்கம் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், ஆடுதுறை அரசு மருத்துவமனை அபாயகரமாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடம் கட்ட அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) புதிய கட்டிடம் கட்டும் உத்தேசம் இல்லை. பழுதுபார்த் செப்பனிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மேற்படி மருத்துவமனை இடிந்து அங்கு உள் நோயாளிகள் அனுமதிக்கப்படாத சூழ்நிலை உள்ளது. ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் தற்போது ஒரு புதிய மருத்துவ மனை கட்டப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான படுக்கைகள் போன்ற உதவிகளைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி நோயாளிகள் பகுதியைச் சீர் செய்யும் வகையில், பழுதுபார்த்து முடியும்வரை உள் நோயாளிகள் பகுதியில் பாதியை வெளிநோயாளி பகுதியாக இயங்க வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பழுது பார்க்க 2 இலட்சம் ரூபாய் செலவாகும் என கணக்கிடப்பட்டு அதற்காக பொதுப் பணித்துறை மூலமாக அந்தப் பணியை உடனடியாக மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த இடத்தைச் சீர் செய்கின்ற பணி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.